# இரட்சிப்பு

RATCHIPPU

RATCHIPPU = SALVATION

Volume-12 | November-2022 | Issue-06

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-





Children are Models of the Kingdom of God - Children's day Nov 14, 2022

ADVENT 2022

Happy Advent Sunday
27th Nov 2022


நீங்கள் மனந்திரும்பி பிள்ளை
களைப்போல் ஆகாவிட்டால்
பரலோக ராஜ்யத்தில்
பிரவேசிக்க
மாட்டீர்கள்
மத்–18:3




சிறு குழந்தைகள்
கடவுள் ராஜ்யத்தின் மாதிரிகள்

## இயக்குநர் கடிதம்...

From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!
இயேசுவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் ‘அட்வென்ட்’ மற்றும் ‘குழந்தைகள் தின’ நல்வாழ்த்துக்கள். இந்தியாவில் கொரோனா பெருந்தொற்று இன்னும் முடிவுக்கு வரவில்லை என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. எனவே, நாம் அனைவரும் முகக்கவசம், கை-சுத்திகரிப்பு, சமூக இடைவெளி, தடுப்பூசி ஆகிய பாதுகாப்பு முறைகளை தொடர்ந்து கடைபிடிப்போம். தமிழ்நாட்டிலுள்ள அரசியல் குழப்பங்கள் மாற, மதவெறி கலாச்சாரமும், வெடிகுண்டு கலச்சாரமும் முற்றிலும் வேரறுக்கப்பட இரட்சிப்பு குடும்பத்தாராகிய எங்களுடன் இணைந்து கருத்துடன் ஜெபித்திட அன்புடன் அழைக்கிறோம்.

நமது ஊழிய இயக்குநரின் இம்மாத ஊழிய நிகழ்ச்சிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். நமது கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், www.ratchippu.in/ratchippu.in என்ற முகவரியில் செயல்படும் நமது **GOOD TIDINGS - RATCHIPPU HOME** வலைதள ஊழியங்கள், புத்தக-வெளியீட்டு ஊழியங்கள் ஆகிய அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். இம்மாத ‘ஜெப-ஜன்னல்’ ஜெபங்கள் 11, 18, 25 தேதிகளில் நடைபெறும். ‘அனைவரும்-ஊழியத்தில்’ என்ற நமது கைபிரதி ஊழிய திட்டத்தில் இணைந்து கைப்பிரதி அருட்பணியில் உதவிட அனைவரையும் அழைக்கிறோம்.

வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (முடைநெ-வங்கி மற்றும் தொடர்பு விபரம் பக்கம் 12-ல்). தேவ சமாதானம் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்கள் உடன் ஊழியன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-143** **மத்தேயு 18:2,3**

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

### சத்திய வேதம் (ரேனியஸ்-1840)

இயேசுவானவர் ஒரு பிள்ளையை தம்மிடம் அழைத்து, அதை சீடர்களுக்குள்ளே நிறுத்தி சொன்னதாவது: நீங்கள் மனம் திரும்பிப் பிள்ளைகளைப்போலாகா விட்டால், பரலோகராஜ் யத்திற் பிரவேசிக்கமாட்டீர் களென்று மெய்யாய் உங்க ளுக்கு சொல்லுகிறேன்.

### பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)

இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை சீடர்கள் நடுவே நிறுத்தி: நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளை களைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவே சிக்கமாட்டீர்கள் என்று மெய்யா கவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்.

### திருவிவிலியம் (பொது-1995)


இயேசு ஒரு சிறு பிள்ளையை அழைத்து சீடர்கள் நடுவில் நிறுத்தி, பின்வருமாறு கூறினார்;” நீங்கள் மனந்திரும்பிச் சிறு பிள்ளைகளைப்போல் ஆகாவிட் டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

### பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)


இயேசு ஒரு சிறுபிள்ளையை அழைத்து, தம் சீடர்கள் முன் நிறுத்தி, சொன்னது: நான் உங்களுக்கு மெய்யாகவே சொல் லுகிறேன், நீங்கள் மனந்திரும்பி உள்ளத்தில் சிறுபிள்ளை களைப்போல் ஆகாவிடில், பரலோகராஜ்யத்தில் ஒருபொழு தும் நுழைய முடியாது.

வசன தியானம் - 137

# மனந்திரும்புவோம்



## குழந்தைகள்போல் மாறுவோம்




**Matt-18:2,3** மத்தேயு-18:2,3

இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை சீடர்கள் நடுவே நிறுத்தி: நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய் யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார். மத்தேயு 18:2,3

மனம் திரும்புதலுக்கும், பிள்ளைகளுக்கும் என்ன சம்பந்தம்? இந்த இடத்தில் பிள்ளைகள் என்று சொல்லப்படுவது தாய் தகப்பனை முற்றிலும் சார்ந்து கொள்ளுகிற மன நிலையைக் குறிக்கிறதாயிருக்கிறது. நம் வாழ்க்கையில் நாம் தேவனை முற்றிலும் சார்ந்து கொள்ளக்கூடிய ஒரு மனநிலைக்குள் வரும் பொழுது, நாம் மனம்திரும்ப வேண்டிய பல காரியங்களை உள்ளடக்கிய தாகவே இருக்கிறது. இயற்கையாக மனிதன், வாழ்க்கையில் தன்னைத்தானே சார்ந்து, நம்பி, தன்னுடைய புத்தியையும், தன்னுடைய அறிவையும், தன் செல்வாக்கையும் நம்பி வாழுகிற பாவத்தன்மை உள்ளவன். ஆதாம்-ஏவாளின் வீழ்ச்சியில் இது ஒரு பங்களிப்பு.

ஆனால் நம்முடைய வாழ்க்கையில் பிள்ளைகளைப் போல ஆக வேண்டுமா னால், நம் வாழ்க்கையில் மனம்திரும்ப வேண்டிய காரியங்கள் உண்டு. அதாவது நம்மை நாமே சார்ந்து கொள்வதை விட்டு, கர்த்தரை மாத்திரமே முற்றிலும் சார்ந்து கொள்கிற மனநிலைக்கு நாம் உட்பட வேண்டும். ‘‘இந்தப் பிள்ளை யைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்.’’ (மத்தேயு-18:4) என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். பொதுவாக தாழ்மைப்படுதல் அனேகர் விரும்பாத ஒன்று. ஆனால் தாழ்மைப் படுதலே மிகப்பெரிய கனத்தை நமக்கு கொடுக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ளத் தவறிவிடுகிறோம். பெருமை நம்மை அழித்துவிடும், தாழ்மை நம்மை உயர்த்தும் என்ற ரகசியத்தை அநேகர் தங்கள் வாழ்க்கையில் விளங்கிக்கொள்வதேல்லை. பெருமையானது, நம்மை மனிதரிடமிருந்தும், உறவுகளிடமிருந்தும், தேவனிடத்திலிருந்தும் பிரித்துவிடும். தாழ்மை, தேவனோடும், மக்களோடும் நமக்கு நல்லுறவை ஏற்படுத்தும். எல்லாவற்றிற்கும் மேலாக தாழ்மை ஒரு மனிதனை தேவனுடைய ராஜ்யத்துக்கு எடுத்துச் செல்லுகிறது. ஆகவே, நாமும் சிறு பிள்ளைகளைப் போன்று கர்த்தரை மாத்திரமே சார்ந்துகொள்வோம். அப்போது நிச்சயமாக பரலோக ராஜ்யத்தின் பங்கை கர்த்தர் நமக்குக் தந்து நம்மை வழிநடத்துவார். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



அருடதிரு. தாமராஜா

படைப்பு: REV. SJD. தர்மராஜா, ஆயர் & அபிவிருத்திச் செயலர், இந்திய சுதேச மிஷனரி சங்கம், சென்னை.
REV. SJD. DHARMARAJA, PRESBYTER & HON. PROMOTIONAL SECRETARY, NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

குழந்தைகள் தின சிறப்பு தேவசெய்தி...



அருட்திரு
சைமன் சாமுவேல்

# ராஜ்யத்தின் மாதிரிகள் குழந்தைகளே

## Children - the models of the Kingdom of God

நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர்; அவரது உரிமைச் சொத்தான மக்கள். எனவே, உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மை மிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி. (1 பேதுரு 2:9)


**Rev. D. Simon Samuel**

Presbyter - CSI Diocese of Madras

CSI Pothaturpet Pastorate, Thiruvallur District, South India


ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் குழந்தைகள் தின நல்வாழ்த்துக்கள். மறைந்த முன்னாள் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் குழந்தைகளை அதிகமாக நேசித்ததால் அவரது பிறந்த நாளான நவம்பர்-14ம் நாள் குழந்தைகள் தினமாக நம் நாட்டில் கொண்டாடப்பட்டு வருவது நாம் அறிந்ததே.

அதே சமயம், சிறு பிள்ளைகளை மிக அதிகமாக நேசித்தவர் நம் இரட்சகராகிய இயேசு என்பதையும் நாம் மறந்துபோகக் கூடாது. குழந்தைகள் என்று நாம் நினைத்தவுடன் இயேசுவானவர் சிறுவனாக இருந்தபோது சொல்லப்பட்ட கீழ்க்கண்ட வசனங்கள் நமது நினைவை நிறைக்கும். ‘‘இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.’’ (லூக்-2:52). சிறுவனாகிய இயேசு எவ்வாறு வளர்ந்தாரோ, அவ்வாறே நம் பிள்ளைகளும் வளரவேண்டும் என்பதை வாஞ்சித்து அதற்காக நாம் ஜெபித்து வருகிறோம் அல்லவா?

இயேசுவானவர் பெற்றிருந்த இந்த தன்மைகள் மற்றும் குணாதிசயங்கள் அனைத்தும் தேவனுடைய ராஜ்யத்தின் புத்திரரின் மாதிரிகளே. எனவேதான் தேவனுடைய ராஜ்யம் அல்லது பரலோக ராஜ்யத்தைப் பற்றி குறிப்பிடும் போதெல்லாம் சிறுபிள்ளைகளை மாதிரிகளாக இயேசுகிறிஸ்து முன்னிறுத்துகிறார். குழந்தைகள் தினத்தை நாம் கொண்டாடி மகிழ்கிற இந்நேரத்தில், சிறுவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் மாதிரிகள் என்ற தலைப்பில் வேதவசனங்களின் துணையுடன் தியானிக்க அழைக்கப்படுகிறோம்.

1. அர்பணிப்பின் மாதிரி - சிறுவன் சாமுவேல்

தற்காலத்தில் கடவுளின் திருப்பணிக்கு தன்னை அற்பணிக்கும் உள்ளங்களின் எண்ணிக்கை மிகக்குறைவு. திருப்பணி செய்துகொண்டிருப்பவர்களில், பெற்றோரின் அர்பணிப்பு மற்றும் கட்டாயத்தை அநேகரிடத்தில் காணமுடியும். அவர்களின் ஊழியத்தில் உள்ள ஈடுபாட்டின் மூலம் அறியலாம். இத்தகைய அர்பணிப்புடைய திருப்பணியாளர்களால் கடவுளின் ராஜ்யத்தை கட்டவும் அறிவிக்கவும் முடியாது, ராஜ்யத்தின் மாதிரியாய் வாழவும் முடியாது.

இச்சூழலில், அர்பணிப்பின் மாதிரியாக சிறுவன் சாமுவேல் நம்முன் வருகிறான். தாயின் அர்பணிப்பை ஏற்று, தானும் அதற்கு உட்பட்டு, தரிசனத்தில் தன்னோடு பேசி அழைப்பவர் யார் என்று தெரியாத நிலையில் ‘‘கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்’’ என்ற வாக்கியம், அர்பணிப்பின் அடிநாதமாக, மாபெரும் அழைப்பின் அடிச்சுவடாக அமைந்ததை நாம் காணமுடிகிறது. இத்தகைய அர்ப்பணிப்பு முழுமையான கீழ்படிதல் காரணமாகவே ஒரு நபரில் துளிர்கிறது.

இத்தகைய அர்ப்பணிப்பை சிறுவர்களே பெரியவர்களுக்கு பல நேரங்களில் கற்றுகொடுக் கின்றனர். ஏனெனில், கர்த்தருடைய வார்த்தை அபூர்வமாய் இருந்த நாட்களில், பிரத்யட்ச மான தரிசனம் இல்லாத காலத்தில் சிறுவன் சாமுவேல் எவ்வாறு தன்னை அர்ப்பணித்தான் என்பதையும், அன்றாடம் கர்த்தருடைய வார்த்தையும், தரிசனமும் இருந்த நாட்களில் வயதில் பெரியவர்களான ஆதாமும் ஏவாளும் எப்படி அகன்று போனார்கள் என்பதும் நாம் திருமறையின் வாயிலாக அறிந்த ஒன்றுதான். எனவே, சிறுவன் சாமுவேலிடம் இருந்த ராஜ்யத்தின் மாதிரியான அர்பணிப்பு நம்மிடம் உள்ளதா என்பதை சிந்தித்து பார்போம்.

2. அசாத்தியத்தின் மாதிரி - இளைஞன் தாவீது

ராஜ்யத்தின் மாதிரிகளில் மிக முக்கியமாக கருதப்படுபவைகளில் ஒன்றுதான் அசாத்தியம். முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் பெரும் அடையாளமாக கருதப்பட்டதும் இதுவே. கிறிஸ்துவை அறிவிப்பதோ, கிறிஸ்துவுக்காக அறையப் படுவதோ எல்லாவற்றையும் அசாத்தியமாக செய்தார்கள், எதிர்கொண்டார்கள். இப்படிப்பட்ட அசாத்தியம் அசதியாய் மாறிப்போன ஒரு கிறிஸ்தவ காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பது பரிதாபத்துக்குரியதாகும்.

இந்த அசாத்தியம் ஒரு நபருக்குள் எப்படி ஏற்படும் என்று நாம் பார்க்கும்போது, இளைஞன் தாவீது நமக்கு அசாத்தியத்தின் மாதிரியாய் காட்சியளிக்கிறான். போர்முனையில் போரிட தகுதி இல்லாதவன், ராஜாவாக அபிஷேகம் பெற தகுதி இல்லாதவன், எனினும் சவுல் ராஜாவும் அவனது போர்படையும் எதிக்க துணியாத கோலியாத் என்னும் பெரும் பூதத்தை; தான் யார்? தன்னோடு இருப்பவர் யார்? என்ற புரிதலால் கிடைத்த அசாத்தியத்தினால் தரைமட்டும் வீழ்த்தியதை நாம் அறிவோம். தற்கால கிறிஸ்தவர்கள் தொலைத்து நிற்கும் ஒரு அறிய பொக்கிஷமாம் ராஜ்யத்தின் மாதிரி இதுவே. இந்த அசாத்தியம் நம்மிடம் இல்லை

ஆதலால், பூதங்களை அல்ல, பூச்சிகளை பார்த்து நாம் தரைமட்டும் வீழ்ந்துபோகிறோம். சரீரத்தை கொல்லவல்லவர்களுக்கே நாம் அஞ்சி பணிகிறோம். இதற்கான ஒரே காரணம், கடவுள் மீதான முழுமையான சார்பு இல்லா ததே. அந்த முழுமையான சார்பை தனது கர்த்தர் மேல் வைத்துக்கொண்டிருந்த இளைஞன் தாவீது இவ்வாறு கூறுகிறான்: ‘‘ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம்?... கர்த்தரின் நாமத்தினாலே வருகிறேன், இன்றயதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்’’ (1சாமு-17:26) என்று அசாத்தியத்தின் மாதிரியாய் முழங்கினான் தாவீது. ராஜ்யத்தின் மாதிரி யான அசாத்தியம் நம்மிடம் உள்ளதா? என நாம் சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

3. அறிவாற்றலின் மாதிரி - சிறுவன் இயேசு

சிறுவர் சீர்திருத்த பள்ளிகளும், சிறுவர் சிறைச்சாலைகளும் உருவாகியுள்ள இந்த காலகட்டத்தில், மனந்திரும்பி சிறுபிள்ளையை போல் என்று சொல்ல முடியாத நிலையில் உள்ளோம். நாம் பிள்ளைகளாக இருந்த காலத்திலும், நம் பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும் இக்காலத்திலும் 12 வயதில், ஆலயத் தோடும், ஆயரோடும் கொண்டிருந்த தொடர்பு எப்படி இருந்தது? அதிகபட்சம் ஞாயிறு பள்ளியில் கலந்து கொண்டிருப்போம். ஆனால் நம் அருள்நாதர் 12 வயது நிரம்பிய சிறுவனாக, தேவாலயத்தில், போதகர் நடுவில், அவர்கள் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டும், அவர்களிடம் கேள்விகள் கேட்டுக்கொண்டும் இருந்தார். பிதாவின் வார்த்தையாய், ஞானமாய் திகழ்ந்த இயேசு, தேவ ஞானத் தின் நிறைவாய் உலகில் உதித்தார். எனினும், அவர் ஒவ்வொரு நாளும் ஞானத்தில் விருத்தியடைந்தார் என்று திருமறை சாட்சி பகருகிறது. சிறுவன் இயேசுவின் இந்த ஞானத்திற்கு காரணம் அவனுக்கு இருந்த வேத அறிவே யாகும். 12 வயது நிரம்பிய யூத சிறுவர்கள் முதிர்வு பருவத்தை அடைவதாகவும், தன்னிச்சையாக யூத மார்கத்தை பின்பற்றும் முதிர்வையும், வேத அறிவாற்றல் பெற்றிருப்பதினால், பெறுவதாக நம்புகின்றனர்.

இந்தகைய அறிவாற்றல் இல்லாததாலும், அறிவாற்றலின் மேல் பற்று இல்லாமல் போனதே, தற்காலத்து கிறிஸ்தவமும், திருப்பணியும் தொய்வடைந்து போனதற்குக் காரணம். ராஜ்யத் தின் இந்த மாதிரி குன்றிபோனதினாலேயே: ‘‘என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்கார மாகிறார்கள் நீ உன் தேவனாகிய கர்த்தருடைய வேதத்தை மறந்தாய்’’ என்று கர்த்தர் ஓசியா தீர்கதரிசி வழியாக கூறுகிறார் (ஓசியா-4:6). வேதத்தை, தேவ ஞானத்தை நாம் நாடுகி றோமா? ராஜ்யத்தின் மாதிரியான அறிவாற்றல் நம்மிடம் உள்ளதா? என சிந்தித்து பார்போம்.

சாமுவேல், தாவீது, இயேசு ஆகியோரைப்போன்று அர்ப்பணிப்பு, அசாத்தியம், அறிவாற்றல் ஆகிய வரங்களை பெற்று தேவராஜ்யத்தின் மாதிரிகளாய் வாழ நம்மை கடவுளுக்கு அர்ப்பணிப்போம்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு. டி. சைமன் சாமுவேல்

அருட்திரு. டி. சைமன் சாமுவேல், ஆயர் - சி.எஸ்.ஐ. சென்னைப் பேராயம்,
சி.எஸ்.ஐ. பொதட்டூர்பேட்டை குருசேகரம், திருவள்ளூர் மாவட்டம், தென்னிந்தியா.

# எமது கைப்பிரதிகள்

## நல்ல விதைகள் – GOOD SEEDS

## நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

### Good Tidings Bible-Prints Ministries

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். சுவிசேஷ ஊழியம் செய்யும் அன்பர்களுக்கும் திருச்சபைகளுக்கும் கைபிரதிகளை இலவசமாய் வழங்குகிறோம். ஒரு வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ. 4000/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து இயேசுவின் அன்பை அனைத்து மக்களும் அறிந்திட உதவுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

| No.&Title of the Tract | Sponsor's Name |
|---|---|
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | - Mr.A. Inbaraj, Kumbakonam |
| 20. மரணத்தின் சாலை - El Camino de la Muerte | |

கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. நற்செய்தி கைப்பிரதிகளை எங்களிடம் இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 66



Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

**Author: Rev. Dr. D. Suresh Rajan**

**சங்கீதம் – 66**

BIBLE RESEARCH CORNER

**Episode - 66**

தாவீதின் சங்கீதங்கள் அவரது அன்றாட வாழ்வினூடே நடந்த சம்பவங்களின் தொகுப்பாகவும், இறைவனுடைய ஆற்றல்மிக்க வழிநடத்துதலுக்காக அவருக்குச் செலுத்தும் நன்றிப்படையலாகவும் அமைந்துள்ளதைக் காண முடிகிறது. பல பொதுவான விஷயங்களை இச்சங்கீதங்களில் தொடர்பொருளாகக் காணமுடியும். ஒரே கருத்தாக இருந்தாலும், வெவ் வேறு சூழ்நிலைகளில் அதை தனது இதயத் தின் நிறைவிலிருந்து பாடலாக தாவீது வெளிப் படுத்துவதை நாம் காண முடியும். சங்கீதம் 66, கருத்துச் செறிவு மிக்க பாடலாக அமைந் துள்ளது. இம்மாத தியானத்திற்கென மூன்று குறிப்புகளை கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

1. சர்வ வல்லவர்:- (வசனம் 1-7)

இங்கு தாவீது இறைவனின் வல்லமை குறித்து விவரிக்கிறார். மடிக்கணினி, அலைப்பேசி போன்ற கருவிகள் இந்நாட்களில் நாம் செய்யமுடியாத அசாதாரணமான பணிகளை, நொடி களில் நிகழ்த்திக்காட்டும் அற்புத சக்தியுடையவை. இன்னும் நமது வாழ்வின் உபயோகத் திற்கான பல கருவிகள் நமக்கு உண்டு. ஆனால், இறைவன் சர்வவியாபியாய், சர்வவல்ல வராய் இருக்கிறார் என்பதை நினைக்கக்கூட நமக்கு நேரமில்லை என்பதுதான் உண்மை.

ஆனால் இறைமக்களாகிய நாம் தேவன் சர்வவல்லவர் என்பதை எப்பொழுதும் நம் மனதில் கொள்ளவேண்டும். நம் வாழ்வில் நடைபெற்ற எண்ணற்ற சம்பவங் கள் இதற்கு ஆதாரமாகும். தாவீது, தன் வாழ்வின் நடந்தது மாத்திரமல்ல, நமது முற்பிதாக்கள் காலத்தில் கர்த்தர் நடத்தின கிரியைகளையும் நினைவு கூர்ந்து தேவனுக்கு புகழ் சேர்ப்பதுடன், அவருடைய நாமத்தைத் துதித்துக் கொண்டாடும்படியாகவும் கூறுகிறார். ‘‘தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள்... கடலை உலர்ந்த தரையாக மாற்றினார். ஆற்றை கால்நடை யாய்க் கடந்தார்கள்.’’ (வச-5,6). ‘‘அவர் நாமத்தின் மகத்துவத்தைக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள்.’’ (வச-1,2).

அன்பர்களே! நாமும் தேவனுடைய மகத்துவங்களை அனுதினமும் யோசித்து, தியானித்து அவரைக் கொண்டாடுவோமாக.

2. வேதனை - விசுவாசியின் பங்கு:- (வசனம் 8-16)

கிறிஸ்தவ வாழ்வு பஞ்சு மெத்தையல்ல அது முள் நிறைந்த ரோசா என்று யாரோ சொன்னது என் நினைவிற்கு வந்தது. ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்விலும் பாடுகள், துன்பங்கள். அவமானங்கள் தவிர்க்க முடியாதவை. இறைவன் பாடுகளை நமது வாழ்வில் அனுமதிக் கிறார். ஆனால், நம்மை அழிப்பதற்காக அல்ல. நாம் குணப்படும்படியும், தேவமகிமை நம்மில் விளங்கும்படியும் அனுமதிக்கிறார். தேவனே, வெள்ளியை நெருப்பில் பரிசோதிப்ப தைப்போல் எங்களை சோதித்தீர். எங்களை கண்ணியில் (வலை) விழச்செய்தீர். கனமான பாரத்தை எங்கள் மீது வைக்கிறீர். பகைவர் எங்கள்மேல் ஏறி நடக்க அனுமதித்தீர். நெருப்பின் வழியாகவும், தண்ணீர் வழியாகவும் எங்களை நடக்கச்செய்தீர். ஆனாலும், பத்திரமான இடத்திற்கு எங்களை அழைத்துவந்தீர்.'' (பரி. பைபிள் வச-10-12). உபத்திரவம் மற்றும் வேதனை ஊடாக நாம் செல்லுகையில் முடிவில் ஒரு பத்திரமான இடத்திற்கு தேவன் நம்மை வழிநடத்துகிறார் என்பதை நாம் மறந்துபோகக்கூடாது (அப்-14:22 வாசிக்க).

அன்பர்களே! உபத்திரவத்தினூடே செல்லும்போது இயேசுவைப் பற்றிக்கொள்ளுங்கள்.

3. தள்ளப்படாத வேண்டுதல்கள்:- (வசனம் 17-20)

நாம் தேவனை நோக்கிக் கூப்பிடும்பொழுதெல்லாம் அவர் நம்மைக் கேட்கிறார் என்பது ஆறுதலான விஷயம். ''மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார். என் ஜெபத்தைத் தள்ளாமலும் தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத் திரம்'' (வச-19, 12) என்று தாவீது அரசர் ஆணித் தரமாக குறிப்பிடுகிறார். நமது வாழ்வில் நம் மனதின் சிறிய மற்றும் பெரிய எண்ணங்கள், ஏக்கங்கள், தேவைகளை ஆண்டவரிடம் மனம்விட்டுக் கூறவேண்டும். அப்பொழுது தேவன் நிச்சயமாய் பதிலளிப்பார். ஆனால், நம் வேண்டுதல்களை அவரது சமூகத்திற்குக் கொண்டு செல்லும் முன் நமது பாவங்களை தேவனிடம் அறிக்கையிட்டு அவருடனான நமது உறவைச் சரிசெய்துகொள்ள வேண்டும். ''என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவி கொடார்.'' (வச-18) என தாவீது கூறுகிறார். திருச்சபைத் தந்தையர் இதனை நன்குணர்ந்த தால்தான், ''செய்யத் தக்கவைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவைகளைச் செய்துவந் தோம்.'' என்ற வரிகளை பாவ அறிக்கை ஜெபத்தில் சேர்த்துள்ளனர். தவறான நோக்கங் களுக்காக நாம் தேவனிடம் ஜெபிக்க முடியாது. ஆகவே, நாம் ஜெபிக்கும் முன்பதாக, தேவ னிடமும் மனிதரிடமும் ஒப்புரவாகி, நல்மனச் சாட்சியுடன் ஜெபம் செய்யவேண்டும்.

முடிவுரை:- அன்பர்களே! சர்வவல்லமையுள்ள கடவுள், வேதனை-சோதனை நேரங்களில் நம் விண்ணப்பங்களை ஏற்று நம்மை ஆசீர்வதிப்பாராக. கிருபை நம்மனைவரோடும் இருக்கட்டும். ஆமேன்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CO-FOUNDER, BIBLE TRANSLATION INITIATIVES, COIMBATORE, SOUTH INDIA
ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,
இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-144 சரியான பதில் அளித்தோர்

1) அமிர்தகனி CHE
2) ஏஞ்சல் சி. TIN
3) ஏஞ்சல் ராஜதுரை CHE
4) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
5) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
6) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
7) அரோமா சாத்ராக் TIN
8) ஆர்தர் மாசில்லாமணி CHE
9) அருள்செல்வி VIR
10) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
11) பங்கஜம் வில்சன் CBE
12) பெல்சி தங்கராஜ் CHE
13) பெனிட்டா பிராங்க்ளின் CHE
14) பியூலா ஜேசுராஜன் PON
15) செலினா பென்சி வில்சன் DR, KUW
16) சந்திராபாய் மாசிலாமணி AVD
17) சந்திரலேகா KAL-AP
18) சந்திரா சாமுவேல் TIN
19) சார்லஸ் ∴பின்னி DR. CHE
20) சார்லட் டேவிட் CHE
21) செல்லம் சங்கீதா TIN
22) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
23) கிறிஸ்துதாஸ் GOP
24) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR
25) கிறிஸ்டி ஞானராஜ் CHE
26) கிறிஸ்டி ஜேம்ஸ் SIR
27) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
28) சிந்தியா ஜாஷ்வா TNJ
29) டேனியல் தாமஸ் TIN
30) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
31) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
32) தெபோராள் ஆனந்தமணி CNG
33) டெல்பி பாத்திமா CHE
34) தேவமணி ஆபிரகாம் TUT
35) தேவநேசம் ராஜாசிங் CHE
36) டோராபாய் CHE
37) எஸ்தர் D.R. TIN
38) எவாஞ்சலின் கிப்சன் MSK
39) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
40) குளோரா BBC BD TEN
41) ஞானம் ஜெபராஜ் TIN
42) ஞானம் பிலிப் CBE
43) ஞானராணி G. PAN
44) ஞானரதி G. PAN
45) ஞானசெல்வி மோசஸ் CHE
46) கோல்டா ஜேசுபாதம் MUM
47) கிரேஸ் டேனி PCM
48) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
49) கிரேஸ்லின் சாந்தி TIN
50) கிரேனா அன்புரோஸ் CHE
51) கிரேஸியா ஜெயபால் CHE
52) கிரிசெல்டா செய்லர் CHE
53) ஹெலன் ஜான்சிராணி TIN
54) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
55) ஹெலன் திலக் TUT
56) ஹேமா அஜீத் CHE
57) ஹேமா கேப்ரியேல் MUM
58) ஹெப்சிபா மங்களராஜ் TIN
59) ஹிம்லா ராஜகுமாரி CHE
60) இளவரசி ஜோபிதா CBE
61) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
62) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
63) ஜமீலா செல்வராஜ் CHE
64) ஜேன்ஸ் ANM
65) ஜேன் தர்மராஜ் TIN
66) ஜான்ஸி சந்தியா MAR
67) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
68) ஜெபா ஜெயராஜ் AVD
69) ஜெபக்குட்டி மோசஸ் TIN
70) ஜெபசீலி கிளின்டன CHE
71) ஜெபஸ்டின் ஜி. KNR
72) ஜெபா சீனி MKM
73) ஜெமி ஜாய் பிளஸ்ஸி TIN
74) ஜெமீலா நிக்ஸன் CHE
75) ஜென்சி ஞானேஷ் MAR/MUM
76) ஜெனித்தா செல்வின் TIN
77) ஜெரின் ஸ்டீபன் CHE
78) ஜெஸி செல்லதுரை CBE
79) ஜெஸி ஜெயக்குமார் TIN
80) ஜெயா ஆல்பர்ட் KUM
81) ஜெயா மங்களம் TIN
82) ஜெயக்குமாரி CBE
83) ஜோனா ஸ்டீபன் AVD
84) ஜோஸ்பின் ஜெஸி CHE
85) ஜாய்ஸ் பாண்டியன் CHE
86) ஜூலியட் CHE
87) ஜூலியட் ஜெயக்குமார் TIN
88) கலா கிருபாகரன் TIN
89) கலையரசி செல்வராஜ் CHE

## வேதாகம போட்டி-144 சரியான பதில் அளித்தோர் பட்டியலின் தொடர்ச்சி

90) கஸ்தூரி எலியாஸ் TIN
91) கிங்ஸ்லி ரவிக்குமார் CHE
92) கிங்ஸ்லி தங்கமணி CHE
93) கிருபா சாந்தி AV. CHE
94) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
95) லதா மைக்கேல்ராஜ் CHE
96) லீலா டேவிட் CHE
97) லீலா ஜோஸப் CBE
98) லில்லி ஜாண்ஸன் CHE
99) லிஸி டென்சிங் TIN
100) மல்லிகா V. CHE
101) மல்லிகா ஜாய்ஸ் TCY
102) மணிமேகலை ஜெயக்குமார் TIN
103) மனோகரம் தனராஜ் NAZ
104) மரியாள் JS TUT
105) மேபல் கிறிஸ்டியான் CHE
106) மரிய பாப்பா CHE
107) மெஜிலா ஜோஷ்வா TUT
108) மெர்சிபா CBE
109) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
110) மெர்சி தனராஜ் CBE
111) மெரிட்டா ஜெயபாலன் TCY
112) மியூரியல் புஷ்பராஜ் CHE
113) நான்சி பால்ராஜ் CTR-AP
114) நிக்ஸன் எவர்பிரைட் TIN
115) ஆலிவ் ஜெயபாலன் CBE
116) பாக்யபாய் ஆரோன் TIN
117) பமீலா எட்வின் KAN
118) பால் தங்கம் CHE
119) பெர்சி பால் பொன்சிங் SAW
120) பிங்க்லின் தேவமலர் CHE
121) பிரேமா பூபாலன் AVD
122) பிரேமா ஜானி PCM
123) பிரேமா ஸ்டாலின் CHE
124) பிரின்ஸ் தயாநிதி CHE
125) பிரிசில்லா தாஸ் CHE
126) பிரிஸ்கில்லாள் சசி CBE
127) பிரியா ராஜ்குமார் CHE
128) ரேச்சல் ஈஸ்டர் VEL
129) ராஜபிரமிளா TPT
130) ராஜ்மேரி சார்லஸ் KER
131) ரமோலா அதிசயராஜ் TIN
132) ராணி பிரபாகரன் TIN
133) ராணி சாமுவேல்ராஜ் CHE
134) ரத்னா டென்னிஸன் CBE
135) ரத்னாவதி பாண்டியன் CHE
136) ரெஜினா விக்டர் TIN
137) ரோஸ்லின் மார்கிரெட் CHE
138) ரோஸி ஸ்டீபன் CHE
139) ரூபவதி நோபிள் TIN
140) ரூபி ஜாண்ஸன் TIN
141) ரூத் ஜாண்ஸன் TIN
142) சலோமி மனோகர் DR. CHE
143) சாம்பு ஜெயச்சந்திரன் MDU
144) சாமுவேல் டேவிட் TPT
145) சாரா பாலசிங் MDU
146) சரோஜா பாக்யசீலி பர்னபாஸ் MSK
147) சரோஜினி எலிசபெத் CHE
148) செல்வ பென்சி ஆபேல் KPM-AP
149) செல்வராணி ஆல்பர்ட் CHE
150) செல்வராணி G CHE
151) செல்வி அமிர்தராஜ் CHE
152) ஷாலி எடிசன் CHE
153) சாந்தி ஆல்பர்ட் PCT
154) சாந்தி ஜெபக்கனி KAL-AP
155) சாந்தி ரோஸ் CBE
156) ஷர்மிளா செல்வராஜ்.DR. CUD
157) ஷீபா சாம்ஸன் CHE
158) ஷீலா சாமுவேல் CUD
159) ஷெரீன் ஜெபராஜ் PAN
160) சவுந்தரம் சாலமோன் CHE
161) ஸ்ரீஜா ஃபிராங்க்ளின் CHE
162) ஸ்டெல்லா டேவிட் TUT
163) ஸ்டெல்லா கனகராஜ் CHE
164) ஸ்டெல்லா சூசையா TUT
165) சுகிர்தா ஆல்வின் CHE
166) சுகிர்தா சின்னதுரை TIN
167) சுஜாதா சாமுவேல் CHE
168) சுமித்ரா B. CHE
169) சுசீலா தியோடர் TCY
170) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
171) தாரா மாணிக்கம் CHE
172) தெல்மா ஸ்டேன்லி MDU
173) உமா குளோரி CHE
174) வனஜா ஹெர்பர்ட் TIN
175) வசந்தா அன்பன் TIN
176) வசந்தி கருணாகரன் CHE
177) வசந்தி வாசன் CHE
178) விஜயராணி A. CHE
179) விஜி டேனியல் CHE
180) வைலட் சைரஸ் CHE
181) வெஸ்லி சாமுவேல் TUT

# PRAYER-WINDOW PRAYER-WINDOW

## ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் நவம்பர் – 2022

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள் : 11–11–2022 இரண்டாம் வெள்ளி<br>நேரம் : காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள் : 18–11–2022 மூன்றாம் வெள்ளி<br>நேரம் : மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள் : 25–11–2022 நான்காம் வெள்ளி<br>நேரம் : இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

# அட்வென்ட் காலம்

## Sunday, the 27th November 2022 - Saturday, the 24the December 2022

அட்வென்ட் என்பது கிறிஸ்துமஸுக்கு முன்னோடியாக இருக்கும் மூன்று அல்லது நான்கு வார காலமாதும். ஒவ்வொரு ஆண்டும் தேதிகள் மாறினாலும் இது இயேசுவின் வருகைக்கு தயாராகி அவரது பிறப்பைக் கொண்டாடும் நேரமாக கொண்டாடப்படுகிறது. அட்வென்ட் என்ற லத்தீன் வார்த்தைக்கு "வருகை" என்பது பொருள், இது கிறிஸ்துவின் பிறந்தநாள் வருவதற்கான முன்னணி என்பதைக் குறிக்கிறது! கிறிஸ்துவின் வருகைக்கு வெவ்வேறு அர்த்தங்கள் உள்ளன, இருப்பினும், தற்போதைய இயேசுவின் வருகை மற்றும் எதிர்கால இயேசுவின் வருகை போன்வற்றை இது குறிக்கிறது. இயேசு எங்கிருந்தாலும் நம்மை நோக்கித் திரும்புவார் என்ற நம்பிக்கையை அடவென்ட் காலம் நமக்கு உறுதிசெய்கிறது.

அட்வென்ட் முதல் வாரம் 'நம்பிக்கையின்' வாரம். முதல் ஞாயிறு ஊதா-நிற 'தீர்க்கனின் மெழுகுவர்த்தி' ஏற்றப்படுகிறது. இது மேசியாவின் வருகைக்காக ஏசாயா நம்பிக்கையுடன் காத்திருந்ததைக் குறிக்கிறது.

அட்வென்ட் 2ம் வாரம் 'அன்பின் வாரம்.' 2ம் ஞாயிறு ஊதா-நிற 'பெத்லகேமின் மெழுகுவர்த்தி' ஏற்றப்படுகிறது. தாவீதின் குலத்தில் அன்பு வைத்து மேசியா பிறப்பார் என்பதன் அடையாளமாகும் இது.

அட்வென்ட் 3ம் வாரம் 'மகிழ்ச்சியின் வாரம்.' 3ம் ஞாயிறு பிங்க்-நிற 'மேய்ப்பனின் மெழுகுவர்த்தி' ஏற்றப்படுகிறது. கிறிஸ்து பிறப்பில் தூதர்கள் அறிவித்த, மேய்ப்பர்கள் அடைந்த பெருமகிழ்ச்சியைக் குறிப்பது இது.

அட்வென்ட் 4ம் வாரம் 'சமாதானத்தின் வாரம்.' 4ம் ஞாயிறு வெள்ளை-நிற 'தூதரின் மெழுகுவர்த்தி' ஏற்றப்படுகிறது. இயேசு சமாதானத்தைக் கொண்டுவந்ததாக தேவதூதர்கள் அறிவித்ததை இது குறிக்கிறது.

# வேதாகம போட்டி-145

வேதபகுதி நீதிமொழிகள் முழுதும்

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

பதில்களுடன் வேதவசன இருப்பிடம் எழுதவேண்டும்

பதிலளிக்க கடைசி நாள் நவம்பர்-25

1. ஏழைக்கு இரங்குகிறவன் யாருக்குக் கடன் கொடுக்கிறான்?
2. ஆத்துமாவுக்கு மதுரமும் எலும்புகளுக்கு ஔஷதமுமாவது எது?
3. இரத்த வருணமாய் இருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய் தோன்றுவது என்ன?
4. உத்தமர்களுக்கு அரணாகவும், அக்கிரமக்காரருக்கு கலக்கமாகவும் இருப்பது எது?
5. யாருடைய தீபம் காரிருளில் அணைந்து போகும்?
6. தன் கைகளினால் வலையைப் பின்னி அரசர் அரமனைகளிலிருக்கிறது எது?
7. கர்த்தர் எதினால் பூமியை அஸ்திபாரப்படுத்தி எதினால் வானங்களை ஸ்தாபித்தார்?
8. வேதத்தை கேளாதபடி செவியை விலக்குகிறவனுடைய ஜெபம் எப்படிப்பட்டது?
9. இது ஜீவ ஊற்று. இதினால் மரணக்கண்ணிகளுக்குத் தப்பலாம் - இது என்ன?
10. தன் பிதாவுக்கு சலிப்பும் தன்னைப் பெற்றவர்களுக்கு கசப்புமானவன் யார்?
11. யாருடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது?
12. அந்தரங்கமாய் கொடுக்கப்பட்ட வெகுமதி எதைத் தணிக்கும்?
13. வெளியே நின்று கூப்பிட்டு, வீதிகளில் சத்தமிடுகிறது எது?
14. உடைந்த பல்லுக்கும் மொழி புரண்ட காலுக்கும் சமானமானது எது?
15. தன் இஷ்டத்துக்கு விடப்பட்ட பிள்ளை தன் தாய்க்கு எதை உண்டுபண்ணுகிறான்?
16. புத்தியை கேளாததால் மடிந்து, மதிகேட்டின் மிகுதியால் மயங்கிப்போவது யார்?
17. தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன்கள் என்னென்ன?
18. தன் வேலையில் அசதியாய் இருப்பவன் யாருக்குச் சகோதரன்?
19. இந்தப் பாதையில் ஜீவன் உண்டு. இதில் மரணம் இல்லை. இது என்ன பாதை?
20. எவற்றை காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கி காக்கிறான்?

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

**THE ROCK OF OUR SALVATION** **TSUR YISH ENU**

## நம்முடைய இரட்சண்ய கன்மலை

EPISODE - 42 ஷூர் ஈஷ் ஈனு பாகம் - 42

கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி, நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள். சங்கீதம்–95:1

O come, let us sing unto the Lord: let us make a joyful noise to the rock of our salvation. Psalm-95:1

இரட்சண்யமும் மகிமையம் கனமும் வல்லமையும் உடைய நம்முடைய இரட்சண்ய கன்மலையின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு நவம்பர் மாத ஸ்தோத்திரமும் வாழ்த்துக்களும்.

2சாமு-23:3,4 இஸ்ரவேலின் தேவனும் கன்மலையுமானவர் எனக்கு சொல்லி உரைத்ததாவது: நீதிபரராய் மனுஷரை ஆண்டு, தெய்வ பயமாய்த் துரைத்தனம் பண்ணுகிறவர் இருப்பார். அவர் காலையில் மந்தாரமில்லாமல் உதித்து, மழைக்குப் பிற்பாடு தன் காந்தியினால் புல்லைப் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணுகிற சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப்போல இருப்பார் என்றார். ஆம், இயேசுவானவர் தம் பிறப்பில் செய்யப்போகிற தேவ பணிகளை தாவீது மூலமாக வெளிப்படுத்தியுள்ள ஆவியானவர், நமது ஆவிக்குறிய வாழ்வில் ஒளியாக (லூக் 2:30-32) குடும்பவாழ்வில் மகிமையாய் வெளிப்பட்டு சகல ஜனங்களுக்கும் முன்பாக நமக்காக ஆயத்தம் பண்ணின இரட்சண்ய ஆசீர்வாதங்களை நம் கண்கள் கண்டு சாட்சியிடச் செய்வது உறுதி.

சங்-32:7 பொறாமையுடன் சத்துரு எழும்பும்போது தேவன் நமக்கு மறைவிடமாய் இருந்து இக்கட்டுக்கு நம்மை விலக்கிக் காக்கிறார். அந்நேரத்தில் ஆவியானவர் நமக்குள் இருந்து இரட்சண்ய பாடல்களை பாடி துதிக்கச் செய்கிறார்.

சங்-27:5 ஆலய ஆராதனைக்கு அழைத்துவந்து நம்மை மறைத்து, ஒளித்து வைப்பதோடு மட்டுமல்ல, யாரும் நம்மை எட்டிப்பிடிக்க முடியாத கன்மலைமேல் உயர்த்தி ஆசீர்வதிக்கிற இரட்சண்ய கன்மலை இவ்வாண்டு முழுதும் நம்மை நடத்திய பாதையில் நம்மை உருவாக்கிய விதத்தை ஒவ்வொன்றாய் நினைத்து அவரை சந்தோஷப்படுத்துவோம்.

ஜெபம்: நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய் தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாய் இருக்கிறவரே! உம்மை மனதார துதிக்கி றோம். சிறுமைப்பட்ட காரியங்களில் எங்களை இரட்சித்து, கன்மலையில் வைத்து எங்கள் விளக்கை ஏற்றுவீராக. எங்கள் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி உயர்ஸ்தலங்களில் நிறுத்துவீராக. இயேசுவின் நாமத்தில் ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தேன்துளி வேதவசனக் கதை–138*. . .

# எனக்கே செய்தீர்கள்

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.



சகோ. அசரியா

பிலிப்பு என்ற தேவபக்தியுள்ள ஓர் மருத்துவர் தமது எம்.டி படிப்பை முடித்துவிட்டு இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் ஒரு கிளினிக் அமைத்து குறைவான கட்டணம் பெற்றுக் கொண்டு ஏழை நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து அவர்கள் அன்பை பெற்று மருத்துவ சேவையை ஒரு ஊழியமாகச் செய்து வந்தார். பின்னர், இங்கிலாந்து தேசத்திற்குச் சென்று இருதய அறுவை சிகிச்சைக்கான எம்.எஸ் படிப்பை முடித்து தமது மருத்துவ சேவையை தொடர்ந்து செய்துவந்தார். அவர் தனது 'கிளினிக்'ஐ தினமும் காலையிலும் மாலையிலும் திறந்தவுடன் வேதம் வாசித்து ஜெபித்து தன் பணியை துவக்குவது வழக்கம். ''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப் படும்.'' (மத்-6:33) என்ற இயேசுவின் அறிவுரையின்படி, கடவுள் கொடுத்த வருமானத்தில் திருச்சபைக்கும் ஊழியங்களுக்கும் உதவி செய்து, ஆசீர்வதிக்கப் பட்டவராய் தனது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்.

அந்நாட்களில் ஆப்பிரிக்கா தேசம் பஞ்சத்தினாலும் இயற்கை சீற்றங்களினாலும் பாதிக்கப் பட்டு பஞ்சம் ஏற்பட்டதால், மக்கள் போதுமான பணவசதியின்றி, உணவின்றி, மருத்துவ வசதியின்றி தவித்தனர். இதையறிந்த மருத்துவர் பிலிப்பு, இயேசுவின் அழைப்பை ஏற்று ஆப்பிரிக்கா சென்று மருத்துவ பணியை சிறப்பாகச் செய்தார். அவர் மூலம் ஆப்பிரிக்க மக்களின் மருத்துவ தேவைகள் சந்திக்கப்பட்டதுமின்றி அநேகர் இருதய அறுவைசிகிச்சை மூலமாகவும் பயன்பெற்றனர். இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவர்கள் கூட தங்கள் வியாதிகளினின்று சுகம் பெற்று விடுதலை ஆனவுடன் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சராக ஏற்றுக்கொண்டனர். இவ்விதமாக இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது. மருத்துவர் பிலிப்புவின் பிள்ளைகள் இருவரும் உயர்கல்வி கற்று, திருமணமாகி மேன்மை பெற்று விளங்கினார்கள்.

பிரியமானவர்களே, நாமும் கூட மருத்துவர் பிலிப்புவைப்போல, செய்கிற பணிகளிலே முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடி, நம்மை சுற்றியுள்ள ஏழை எளிய மக்களுக்கு சேவைசெய்ய வேண்டும் என்பது இயேசுவின் எதிர்பார்ப்பு ஆகும். நமது பகுதிகளில் பல்வேறு வியாதிகள், துன்பம், துயரம் மற்றும் கண்ணீரில் வாடித்தவிக்கும் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு செய்யும் பணிகளை இயேசுகிறிஸ்து விரும்புகிறார். இவ்விதம் செயல்படும் போது இயேசு கிறிஸ்துவின் அன்பை அவர்கள் உணர்ந்து பரலோக ராஜ்யம் செல்லும் பாக்கியத்தை அவர்களும் அடைய நாம் உதவி செய்ய முடியும். இவ்வித பணிகளைச் செய்ய உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். வேதம் சொல்லுகிறது:

மிகவும் சிறியவர்களாகிய இவர்களின் ஒருவனுக்கு எதைச்செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள். மத்–25:40
சிறுமைப்பட்டவர்கள் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான். சங்–41:1
சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிறவர் தேவன். 2கொரி–7:6

EPISODE 4

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...



கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்

**இந்திய திருச்சபை சரிதை:**
**(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)**
**தொகுதி-1 பகுதி-4**

1. இந்தியாவில் கிறிஸ்தவத்தின் தொடக்கம்.

4. இலக்கியம் மற்றும் தொல்லியல் சான்றுகள்

இந்தியாவில் புனித தாமஸின் வருகை, தாமஸின் பாரம்பரியம், தென் மற்றும் வடஇந்தியாவில் கிறிஸ்தவத்தின் தொடக்கம் அதைத் தொடர்ந்து ஏழரை தேவாலயங்கள் நிறுவப்பட்டது என அனைத்தும், மேற்கத்திய வரலாற்றாசிரியர்களால் சந்தேகத்துடன் பார்க்கப் பட்டது உண்மைதான். ஆயினும் 1. இலக்கிய சான்றுகள் 2. சர்வதேச பயணிகள் 3. வாழும் சமூகங்கள் (இந்திய பாரம்பரிய மரபுகள்) 4. பழமையான பாடல்கள் 5. வரலாற்று கண்டுபிடிப்புகள் போன்றவை இந்தியாவில் கிறிஸ்தவ தொடக்கத்தின் மறுக்கமுடியாத பெரும் ஆதாரங்கள். இந்த பகுதியில் இதுபற்றி விரிவான தகவல்களை அறிந்து கொள்வோம்.

1.இலக்கிய சான்றுகள்

நாசியன்சஸின் கிரிகோரி:- இவர் கான்ஸ்டான்டினோப்பிளின் பிஷப் ஆவார். இவரது எழுத்துக்கள் அப்போஸ்தலர்களைப் பற்றி பேசுகிறது. அப்போஸ்தலர்கள் வலிமையானவர்கள் அல்ல ஆயினும் பல நாடுகளுக்குள் ஊடுருவி, நற்செய் தியை எடுத்துச் செல்லும் பணியைச் செய்தார்கள் என குறிப்பிடுகிறார். இவர் தாமஸ் மற்றும் அவரது பாரம்பரிய சட்டங்கள் பற்றி குறிப்பிடுகிறார். அப்போஸ் தலர்களான பேதுரு யூதேயாவிலும், பவுல் புறஜாதிகளுக்கும், லூக்கா அக்காயா விலும், யோவான்-லூக்கா எபேசுவிலும், தாமஸ் இந்தியாவிலும், மாற்கு இத்தா லியிலும் சுவிசேஷம் அறிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

அம்புரோஸ்:- இவர் மிலன் பகுதியின் பிஷப் ஆவார். இவர் தாமஸ் பற்றியும், கர்த்தருடைய வார்த்தைகளின்படி தாமதமின்றி கடினமான நிலைமைகளிலும் அப்போஸ்தலர்கள் தங்கள் அழைப்பை நிறைவேற்றினதை குறிப்பிட்டுள்ளார்.

புனித ஜெரோம்:- இவர் ஒரு இத்தாலிய கிறிஸ்தவ அறிஞர். இவர் இந்தியாவில் தாமஸுடன், ரோமில் பேதுருவுடன், கிரீட்டியில் தீத்துவுடன், அச்சாயாவில் அந்திரேயாவுடன் தொடர்பில் இருந்ததாகவும், கி.பி-379ன் இறுதியில் போப்பின் செயலாளராக பணியாற்றினார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2. சர்வதேச பயணிகள்

பாண்டனியஸ்:- சீசரியாவில் பிஷப்பாக பணியாற்றிய ஆரம்பகால திருச்சபைத் தந்தை யூசாபியஸ், பான்டேனியஸ் என்ற சர்வதேச பயணி பற்றி தான் எழுதிய புத்தகம் ஒன்றில் குறிப்பிடுகிறார். அவர் கிபி-180ல்

இந்தியாவிற்கு விஜயம் செய்தார், அங்கு பரி. தோமா கிறிஸ்தவர்களுக்காக விட்டுச்சென்ற மத்தேயு நற்செய்தியைக் (ஹீப்ரு-மொழி பிரதி) கண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

மார்க்கோ போலோ:- மார்க்கோ போலோ மற்றொரு முக்கியமான தகவல் ஆதாரமாக இருந்தார். இந்தியாவை பார்வையிட்டு கி.பி.13ம் நூற்றாண்டில் அவருடைய வருகை பற்றிய ஒரு விளக்கத்தைத் தருகிறார், 'விசிட்-டு-செயின்ட் தாமஸ் டோம்ப்'. அவரது தகவல்படி, பரி. தோமாவின் உடல், மக்கள்த் தொகை அதிகம் இல்லாத ஒரு குறிப்பிட்ட சிறிய நகரத்தில உள்ளது. சில வியாபாரிகள் செல்லும் இடம் இது. இருப்பினும், கிறிஸ்தவர்கள் பொதுவாக புனித யாத்திரையாக இதைப் பின்பற்றுகிறார்கள் என எழுதினார். இது இந்தியாவில் உள்ள செயின்ட் தாமஸ் கிறிஸ்தவர்களை சுட்டிக்காட்டுகிறது.

தென்னிந்திய காவியம் மணிமேகலை, நஸ்ரானி மக்களை எசானிஸ் என்ற பெயரில் குறிப்பிடுகிறது, இது நஸ்ரானிகளுக்குள் இருந்த ஆரம்பகால கிறிஸ்தவ-யூதப் பிரிவான எனனேயர்களைக் குறிக்கிறது. மார்கோ போலோ, மலபார் கடற்கரையில் உள்ள நஸ்ரானிகள் மற்றும் அவர்களின் பண்டைய தேவால யத்தை தனது எழுத்துக்களில் (புத்தகத்தில்) குறிப்பிட்டுள்ளார்.

மற்றவர்கள்:- இந்தியாவிற்கு வந்த 'காஸ்மோஸ்' என்ற துறவியும் இந்தியாவி லிருந்த கிறிஸ்தவ சபைகளைப் பற்றி தன் சுயசரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். கி.பி.833ல் ஆல்ஃபிரட்டின் தூதரகம், 'நெஸ்டோரியன் சிரிய' கிறிஸ்தவர்கள் மலபார் கடற்கரையில் வளமானவர்களாகவும் உயர்ந்த அந்தஸ்தை அனுபவிப்பவர்களா கவும் இருந்ததை விவரிக்கிறது.

நான்காம் நூற்றாண்டில் மருதா என்னும் கிறிஸ்தவரைப் பற்றி புனித ஜான் கிறிசாந்தோம் குறிப்பிடுகிறார். அவர் இந்துவாக இருந்து, கிறிஸ்தவராக மதம் மாறியதாகவும் அவர் இந்தியாவில் சபை தலைவராய் இருந்து கிபி-381ல் கான்ஸ்டாண்டிநோபிள் பொதுச்சங்கத்தில் (Constantinople Church Council) கலந்து கொண்டதாகவும் குறிப்பிடுகிறார்.

கி.பி-345ல் கானாவூர் தோமா என்பவர் பெர்சியா நகரை விட்டு கேரளாவுக்கு வந்தார். அவருடன் எழுபத்து இரண்டு கிறிஸ்தவ குடும்பங்களும் வந்து கேரளா வில் குடியேறினார்கள். அவர்கள் அங்கே ஒரு ஆலயமும் கட்டி அங்குள்ள கிறிஸ்தவர்களோடு இணைந்து வாழ்ந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

3. வாழும் சமூகங்கள் (இந்திய பாரம்பரிய மரபுகள்) கேரளர்கள் வரலாற்று ரீதியாக தங்கள் தேவாலயத்திற்கு அப்போஸ்தலிக்க தோற்றம் இருப்பதாக கூறுகின்றனர். தாமஸ் எப்படி இந்தியாவிற்கு வந்தார் என்பது பற்றி கிபி-50 அல்லது 52ல் முசிரிஸின் பண்டைய நீதிமன்றங்களில் கிடைக்கக்கூடிய உள்ளூர் சான்றுகள் வாய்மொழியாகவும் வரலாற்று ரீதியாகவும் உள்ளன. வாய்வழி பாரம்பரியமும் மற்றும் பனை-ஓலை ஆவணங்களும் வாழும் சமூகங்களின் குடியேற்றம், வசிப்பிடம் மற்றும் சென்ற இடங்கள் பற்றிய விவரங்களை விவரித்தன. இதில் பல தாமஸ் கிறிஸ்தவ குடும்பங்கள் உண்டு.

4. பழமையான பாடல்கள்:- முண்டன், முக்கிய உள்ளூர் ஆதாரங்களைத் தருகிறார், அதில் நன்கு அறியப்பட்டவை 'ரப்பன்பாட்டு'. 'ரப்பன்பாட்டு' என்பது கேரளாவில் பிரபலமான திருமணப் பாடல். இது சுமார் 48 தலைமுறைகளாக வாய்வழி பாடலாக இருந்து கி.பி-6ம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுத்து வடிவம் பெற்றது. கிறிஸ்தவ வழிபாட்டு முறை பற்றிய 'மார்கம் களிபாட்டும்' ஆதாரமாக உள்ளது. தாமஸ் சில பிராமணர்களை பழையூரில் இருந்து கிறிஸ்தவ நம்பிக்கைக்கு மாற்றினாராம். மீதமுள்ள வர்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறி செல்லும்போது, 'அடுத்த குளியல் மணிக்கு வேம்பநாடு' என்பது பழமொழியாக மாறியது. இன்றும் பிராமணர்கள பழயூர் பகுதியில் சாப்பிடுவதில்லையாம்.

5. வரலாற்று கண்டுபிடிப்புகள்:- 'இந்தியாவில் சிரியன் திருச்சபையின் வரலாறு' என்ற புத்தகத்தில், "செயின்ட் தாமஸின் தென்னிந்திய வருகையை நிரூபிப்பது கடினமானது ஆனால், தாமஸ் வருகை பற்றிய உள்ளூர் பாரம்பரியம் மிகவும் வலுவானது. மேலும், அவருக்கு எதிரான வேறு எந்த உள்ளூர் போட்டி மரபுகளும் இல்லை. தென்னிந்தியாவில் திருச்சபை தோன்றியதின் நினைவாக தாமஸ் பாரம்பரிய கூட்டம் நடைபெற்றுள்ளது. வேறுபாடுகள் எதுவாக இருந்தாலும், ஆரம்ப காலத்திலிருந்தே புனித தாமஸ் இந்தியாவிற்கு வருகை தந்ததற்கான போதுமான ஆதாரங்கள் உள்ளன என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது." என கூறப்பட்டுள்ளது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope’s College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் நன்றி-பலிகள்

## கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God

1) அகில உலக மக்களின் சுக வாழ்வுக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளின் பொருளாதாரம் மேம்பட... பெருந்தொற்று, புயல்-மழை, பூமி-அதிர்ச்சி, எரிமலை, காட்டுத்-தீ போன்ற இயற்கை பேரிடர்களிலிருந்தும், பிரிவினைவாதம் - தீவிரவாதங்களி லிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்திய பொருளாதாரம் சீரடைய... இந்தியாவில் மதவாதம், வன்முறைவாதம் முடிவுக்குவர... ஒன்றிய அரசு எல்லா மாநிலங்களையும் சமமாய் பாவித்து நடத்த... விலைவாசிகள் கட்டுப்படுத்தப்பட... மாநிலங்களுக்கு சேரவேண்டிய நிதியை ஒன்றிய அரசு பாரபட்சமின்றி வழங்க... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... மக்களை பிரித்தாள சூழ்சிசெய்யும் இயக்கங்கள் வேரறுக்கப்பட...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... தமிழக மக்கள் அனைவரும் இன -மத - மொழி வேறுபாடின்றி வாழ... தமிழ்நாட்டில் விவசாயம் மற்றும் தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டில் மத-பிரிவினைவாதங்கள், வன்முறைவாதங்கள் கட்டுப்படுத்தப்பட... புயல் - மழை - வெள்ளம் - கொரோனா பாதிப்புகள் நீங்க...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர் கல்வி பயின்று வரும் நம் பிள்ளைகள் கி.ஃப்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜாஷ்வா மேத்யூ, ஷெர்லி ஜூடியா, டிரிசியா லவ்ஸ்லி, ஜாய்ஸ் கிறிஸ் டினா, ஜோ.ஃப்னா, ஜெனிபர், கி.ஃப்ட்லின், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு சிறப்பான ஞானம் வழங்கப்பட...

6) திருமதி. ஜாஸ்மின் ஞானதாஸ், திருமதி. எஸ்தர், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜ மணி, திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. ஈவ்லின் சிப்பெர், திருமதி. எபனேசர், திருமதி. லீலா மனோகர சிங், திரு. பிலிப், திருமதி. ஞான ரத்தினபாய், திருமதி. தங்கம் ஜோன்ஸ், திருமதி. மேரி கிரேஸ் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி.சுந்தரிபாய், திருமதி.மேரிதேவதாஸ், திருமதி.வசந்தாஅன்பன், திருமதி.வனஜா ஹெர்பர்ட், திருமதி.மங்களராணி ஞானப்பிரகாசம், திருமதி.ஹேமலதா ராஜமணி, திருமதி.சார் லெட்டேவிட், திருமதி.அலீஸ்ரெஜினாபாய், திரு.அப்பன்டேவிட் ஆகியோர் குடும்பங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு.எஸ்.ஜே.பி. ராஜா, திரு. நிக்ஸன் எவர்பிரைட், திரு. அசரியா ஞானதாஸ் ஆகியோருக்காக... அவர்களுடைய குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

9) திருமதி. ஏஞ்சல் ஜெனி.ஃபா அவர்களின் சுக-பிரசவத்துக்காக...

# வேதாகம போட்டி-144 (சங்கீதம் 100-150)

## சரியான விடைகள்

1. வாசஸ்தலமாகும்படி சங்:-132:13
2. இரட்சிப்பினால் சங்:-149:4
3. தேவதாரு விருட்சம் சங்:-104:17
4. துன்மார்கன்-னுடைய சங்:-102:10
5. மூலைக்கு தலைக்கல் சங்:-118:22
6. பினெகாஸ் சங்:-106:30
7. துன்மார்க்கருக்கு சங்:-119:155
8. யோசேப்பு சங்:-105:17-19
9. இசைவிணைப்பான சங்:-122:3
10. சீயோன் சிறையிருப்பை சங்:-126:1
11. கர். வேதத்தின்படி சங்:-119:1
12. பரிசுத்தவான்கள் சங்:-149:5
13. தாத்தான் அபிராம் சங்:-106:17
14. வாலவயதின் குமாரர் சங்:-127:5
15. துன்மார்க்கரை சங்:-147:6
16. வானங்களில் சங்:-103:19
17. வானத். பூமியையும் சங்:-124:8
18. யாக்கோபு சங்:-105:23
19. பாதக.மார்-அக்கிரமங்கள் சங்:-107:17
20. நீதிமான்களுடைய சங்:-125:3

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL**: 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL**: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B.ACCOUNT NO**: 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:** REV. DHARMARAJA SJD: 9789914463



## குழந்தைகள் தின நல்வாழ்த்துக்கள்



**இரட்சிப்பு** பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலக-வலைதள பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்துத் திருச்சபை விசுவாசக் குடும்பத்தார், தபால்-துறை மற்றும் அச்சக-நண்பர்கள் ஆகிய உங்கள் அனைவர் குடும்பங்களிலும் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் எங்களது உள்ளம் கனிந்த குழந்தைகள் தின நல்வாழ்த்துக்கள்.

**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்




CHILDREN'S DAY-2022

14th November 2022

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th November 2022.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. மலேசியாவில் கடந்த 2-ஆண்டுகளில் 3-பிரதமர்கள் பதவியேற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாத நிலையில் அங்கு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. நவ.19ல் தேர்தல் நடைபெறும் என தேர்தல் கமிஷன் அறிவித்தது.

2. உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலைச் சுற்றி 500-மீ தூரத்திற்கு கடைகள் இருக்கக்கூடாது என்ற சுப்ரீம்-கோர்ட் ஆணைப்படி 3-மாதங்களுக்குள் கடைகளை அகற்றும்படி 3000-வணிகர்களுக்கு உ.பி. மாநில அரசு நோட்டீஸ்.

3. கிராமப்புறத்தில்-25, நகர்ப்புறத்தில்-25, என தமிழ் நாட்டில் அமையவுள்ள 50-அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான இடங்கள் தேர்வுசெய்யப்பட்டு தொடர்-பணி நடைபெற்று வருகிறது என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்.

4. இந்தியாவுக்கு குரூட்-ஆயில் சப்ளை செய்வதில் ரஷ்யாவை பின்னுக்குத் தள்ளி, 3மாதங்களுக்கு பின் மீண்டும் 2-ம் இடம் பிடித்தது சவுதி-அரேபியா. இந்தியாவுக்கு எண்ணெய் சப்ளை செய்வதில் முதலிடத்தில் உள்ளது ஈராக்.

5. இந்தியா உட்பட 16-அணிகள் பங்குபெறும் டி-20 உலகக்கோப்பை கிரிக்கெட், ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகிறது. அக்-16ல் தொடங்கி நவ-13ல் முடியும் இப்போட்டிகளில் நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா ஆகும்.

**Posted on: 10th November 2022**

**To**

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2–A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.